# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

## BEAUTY WORLD MIDDLE EAST

# இலங்கை நாட்டு வர்த்தக மண்டபம்
# (Sri Lanka Country Pavilion)

## 2026 ஒக்டோபர் 6 – 8 – டுபாய், ஐக்கிய அரபு இராச்சியம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் 2026 ஒக்டோபர் 6 தொடக்கம் 8 வரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ள BEAUTY WORLD MIDDLE EAST கண்காட்சிக்கு இலங்கை நாட்டு வர்த்தக மண்டபம் ஒன்றை ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

BEAUTY WORLD MIDDLE EAST வர்த்தகக் கண்காட்சி MEASA பிராந்தியத்தின் மிகப்பெரிய அழகுக்கலை வர்த்தகக் கண்காட்சியாக கருதப்படுகிறது. ஆயுர்வேத மருந்துகள் மற்றும் அழகுக்கலை உற்பத்திகளை உற்பத்தி செய்வோர்/ ஏற்றுமதியாளர்கள்/ கொள்வனவாளர்கள்/ விநியோகஸ்தர்கள் ஒரே இடத்தில் சந்திப்பதற்கு மற்றும் வர்த்தகக் கலந்துரையாடல்கள் மற்றும் அறிவு மற்றும் தொழில்நுட்பத்தை பரிமாறுவதற்கு வாய்ப்பு வழங்குகிறது. இலங்கை நாட்டு மண்டபம் ஒன்றை ஏற்பாடு செய்வதற்கான நோக்கமானது இலங்கை நிறுவனங்களுக்கு இலங்கையின் ஆயுர்வேத, மருந்து மற்றும் அழகுக்கலை உற்பத்திகளை காட்சிப்படுத்துவதற்கு, ஊக்குவிப்பதற்கு மற்றும் பிராந்தியத்தில் வர்த்தகப் போக்கை புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதாகும்.

**விண்ணப்பிக்க முடிவது யாருக்கு?**

சர்வதேச தரநிலைகளுக்கு அமைவான மற்றும் சர்வதேச சந்தைக்கு வழங்கல் திறனைக் கொண்ட, கீழ் குறிப்பிடப்பட்ட உற்பத்திப் பிரிவுகளின் கீழ் ஆயுர்வேத, மருந்து மற்றும் அழகுக்கலை உற்பத்திகளின் உற்பத்தியாளர்கள்/ ஏற்றுமதியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Skin Care Products** (மொய்சரைசர், பேஸ் வொஷ், டோனர், சூரிய கதிரில் இருந்து பாதுகாப்புப் பெறும் கிரீம் (Sunscreens), சீரம், பேஸ் மாஸ்க்)

**Hair Care Products** (ஷெம்பூ, கண்டிஷனர், தலைமுடி எண்ணெய் (ஆயுர்வேத/ மருத்துவ குணமுடையது), கண்டிஷனர், சீரம், முடிக்கு நிறமூட்டும் பொருட்கள் மற்றும் டை வகைகள்)

**Makeup Products** (பௌன்டேஷன் மற்றும் BB கிரீம், லிப்ஸ்டிக் மற்றும் உதடுகளை பராமரிக்கும் பாம், ஐ லைனர், மஸ்காரா, காஜல், ஐ ஷடோ)

**Body Care Products** (பொடி லோஷன் மற்றும் கிரீம், ஸ்க்ரப், டியொடரன்ட் மற்றும் வாசனை பொருட்கள், சவர்க்காரம் மற்றும் உடல் சுத்தம் செய்யும் ஜெல், கை மற்றும் பாதங்கள் பராமரிப்புக் கிரீம், ஆயுர்வேத உடல் பிடிப்பு எண்ணெய், மருத்துவ குணமுடைய ஹெர்பல் தேயிலை)

**Nail Care Products** (நகப் பூச்சு, நகப் பூச்சு அகற்றல் திரவம், கியூடிகல் பராமரிப்பு உற்பத்திகள்)

**Wellness Products** (நல்வாழ்வு சார்ந்த உற்பத்திகள்)

**பங்கேற்புச் செலவு**

இடம் மற்றும் நிர்மாணச் செலவுகள் மற்றும் அனைத்து தொடர்புடைய செலவுகளையும் பங்கேற்கும் நிறுவனங்கள் ஏற்றல் வேண்டும். கிடைக்கப்பெறும் நிதிக்கு அமைவாக தேர்வு செய்யப்படும் SME நிறுவனங்களுக்கான இடம்/ நிர்மாணத்தின் செலவின் பகுதியை ஏற்று நிதி உதவி வழங்க EDB பரிசீலனை செய்யும்.

**விண்ணப்பம் மற்றும் தேர்வு**

விண்ணப்பங்களை www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்தில் (“Announcements” பிரிவின் கீழ்) கிடைக்கப்பெறும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் மேற்கொள்ளல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “Beauty World Middle East 2026” என்று குறிப்பிட்டு 2026 ஜூலை 27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் - ஏற்றுமதி விவசாயம், EDB என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இந்த நிகழ்ச்சிக்காக பொருத்தமான பங்கேற்பாளர்களை தேர்வு செய்வதற்கு குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் EDB மூலம் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

மேலதிக விபரங்களுக்கு, 011-2300732, 070 208 7273, மின்னஞ்சல்: madurika@edb.gov.lk இல் உதவிப் பணிப்பாளர்/ செல்வி மதுரிகா மெனிக்புர அவர்களை தொடர்புகொள்ளவும்.

**தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**
**NDB-EDB கோபுரம், 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு - 02**

**இணையதளம்: www.srilankabusiness.com**